2015 ஆகஸ்ட் 26]

கண்காணிப்புக் கேமிரா

*49404—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:
திரு. ரா. சரத்குமார்:
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களே திகைத்துப் போகும் அளவிற்கு திட்டங்களைத் தரும் தாயே, தருமத்தின் பெயர் நீங்களே, (மேசையைத் தட்டும் ஒலி) ஓசையின்றி உதவும் குணம் வாய்க்கப்பெற்றோர், இறை பேறுபெற்றோர் என்பார் சான்றோர். ஆனால், இறைவனின் வடிவமே மாண்புமிகு அம்மா அவர்கள்தான். மாண்புமிகு அம்மா அவர்கள், மாட்டு வண்டி போகமுடியாத இடத்தில்கூட பாதையை சரிசெய்து, Small Bus-ஐ இயக்கி, மனித சக்தி கடந்த மகா சக்தி ஆவார். உண்ணும்போதும், உறங்கும்போதும் இன்றைக்குத் தமிழகமெங்கும் உச்சரிக்கும் ஒரே பெயர் அம்மா! அம்மா! அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இந்த எளிய தொண்டனுக்குப் போக்குவரத்துத் துறையில் முதன்முதலில் பதிலளிப்பதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் 100 வால்வோ குளிர்சாதனப் பேருந்துகளில் பயணிகளின் பாதுகாப்பிற்காகவும், பேருந்துகளின் பாதுகாப்பிற்காகவும் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன. நிதிநிலைக்கேற்ப, மற்ற புறநகர் மற்றும் நகரப் பேருந்துகளில் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்காணிப்புக் கேமிராக்கள் பேருந்துகளிலே பொருத்தப்படும்போது, நிச்சயமாக பயணிகளின் பாதுகாப்பு, பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதோடு, பிற குற்றங்களைத் தடுப்பதற்கும் பெரிய அளவிலே உதவும். அந்த வகையிலே, சென்னையில் உள்ள வால்வோ பேருந்துகளிலே கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அறிவிப்புக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழகத்தில், தூத்துக்குடி மாவட்டத்தில், முதலில் தனியார் பேருந்துகளிலும், பிறகு 6 அரசுப் பேருந்துகளிலும் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்பட்டு, அதன்மூலமாக சமூகங்களுக்கிடையிலான மோதல்கள் பெரிய அளவில் தவிர்க்கப்பட்டிருப்பதாக அந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளரே சொல்லியிருக்கின்றார். எனவே, பேருந்துகளில் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தும் திட்டத்தை அரசுப் பேருந்துகளில் மட்டுமல்லாமல், தனியார் பேருந்துகளிலும், குறிப்பாக, வெளியூர் செல்லக்கூடிய ஆம்னி பேருந்துகளிலும் பொருத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்பட்ட அரசுப் பேருந்துகள் 6 அல்ல; 8 பேருந்துகளில் அவை பொருத்தப்பட்டுள்ளன. 5 தனியார் பேருந்துகளில் பொருத்தப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் 6 பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றால், ஒரு பேருந்திலே கண்காணிப்புக் கேமிராவைப் பொருத்துவதற்கு, குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாய் செலவாகும். மாநில அரசினுடைய நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தனியார்*

2015 ஆகஸ்ட் 26]

பேருந்துகளில் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்படுவதைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு நீங்கள் இரண்டாவது முறையாக துணைக் கேள்வி கேட்க முடியாது. ஏனென்றால், மூலக் கேள்வியை மூன்று உறுப்பினர்கள் கேட்டிருக்கின்றீர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து விதிகளுக்குட்பட்டு, தமிழகத்திலே இயங்கக்கூடிய கல்லூரி மற்றும் பள்ளிக்கூடப் பேருந்துகளில் கட்டாயமாக கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்படுவதற்கு அரசு விதிமுறைகளைக் கொண்டுவருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பேருந்துகளிலும் கண்காணிப்புக் கேமிராக்களைக் பொருத்துவதற்குண்டான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று உச்ச நீதிமன்றம் ஓர் அறிவுரையை வழங்கியிருக்கிறது. அது மாநில அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்துவதன்மூலம், எந்தெந்த பயணிகள் எந்தெந்தப் பேருந்துகளில் ஏறிச் செல்கிறார்கள் என்பதையும், வாகனம் எப்படி, எந்தப் பகுதியில் செல்கிறது என்பதையும் அறிந்துகொள்ள

முடிகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், சில பேருந்துகளில் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், தமிழகத்திலே இயக்கப்படுகின்ற அனைத்துப் பேருந்துகளிலும் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்தினால் குற்றங்களைத் தடுப்பதற்கு இயலும். ஒரு பேருந்தில் கண்காணிப்புக் கேமிராவைப் பொருத்துவதற்கு குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கோடிக்கும் அதிகமான விலை மதிப்புள்ள மக்களைப் பாதுகாப்பதற்கு, 25 ஆயிரம் ரூபாய் என்பது பெரிதல்ல. ஆகவே, தமிழகத்திலே இயங்கும் அனைத்துப் பேருந்துகளிலும் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்த வேண்டும். அது காலத்தின் கட்டாயம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தமிழகத்திலே இயக்கப்படுகின்ற அனைத்துப் பேருந்துகளிலும் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்துவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சி ஆட்சி நடத்திய காலத்தில் பேருந்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை நினைவுகூர விரும்புகிறேன். டெல்லியில் கிட்டத்தட்ட 3,500 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் ஆட்சியை விட்டுச் சென்றபோது, வெறும் 200 பேருந்துகளில்தான் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்திவிட்டுச் சென்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், மக்களுக்குப் பாதுகாப்பான மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இருந்தாலும், பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப, ஒரு பேருந்துக்கு 25,000 ரூபாய் வீதம் 22,474 பேருந்துகளுக்குப் பொருத்த வேண்டியுள்ளது. இதற்கு பெரும் தொகை தேவைப்படுகிறது.

2015 ஆகஸ்ட் 26]

ஆகவே, நிதிநிலைக்கேற்ப கொஞ்சம், கொஞ்சமாக கண்காணிப்புக் கேமிரா பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளாக கேள்வி நேரத்தில் பின்வரும் கேள்வியைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்றோம். நீங்களும் செய்து தருவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்துப் பயணத்திற்கு அனுமதிப்போம் என்று நீங்கள் வாக்குறுதி கொடுத்து ஐந்து ஆண்டுகள் நிறைவடையப் போகிறது, இதற்காக என்ன திட்டமிட்டிருக்கிறீர்கள்? இத்திட்டம் அமல்படுத்தப்படுமா? இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும், தமிழகத்திலேதான் 2 வயது குழந்தைகளுக்குக்கூட பேருந்துகளில் பயணம் செய்ய டிக்கெட் வாங்க வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. அது குறித்தும் பரிசீலிப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 வயது குழந்தைக்கு ஒரு பேருந்து நிறுத்தத்தில் ஒரே ஒரு முறை டிக்கெட் வாங்கியதாகத் தகவல் வந்தவுடன், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த நடத்துனரை சஸ்பெண்டு செய்திருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுபோன்று 2 வயது குழந்தைக்கு டிக்கெட் வாங்கச் சொல்லாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மூத்த குடிமக்களுக்கு இலவச பயணத்திற்கு அனுமதிப்பது குறித்த விளக்கத்தினை எனது பதிலுரையில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

[2015 ஆகஸ்ட் 26

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. ஆர்.கே. நகர் தொகுதியில் வெற்றி வாகை சூடி வரலாற்றுச் சாதனை படைத்து, ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்று, புகழ் வாய்ந்த இந்த மாமன்றத்திற்கு வருகை தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இன்று உலகில் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு வசதிகளை அறிவியல் வளர்ச்சியின்மூலம் பெற முடிகிறது. தகவல் தொழில்நுட்பத்தை போட்டி போட்டுக்கொண்டு மக்கள் பயன்படுத்துவதனால், தற்போது உலகம் உங்கள் கையில் என்ற நிலைமை உருவாகிவிட்டது. நெடு நாட்களுக்கு முன்னர், ஒரு ஆடம்பரப் பொருளாக, அதுவும் வசதி படைத்தவர்களின் பயன்பாட்டிற்காகவே தொலைபேசி நம்மிடையே இருந்து வந்தது. இன்று அந்நிலைமை மாறி, செல்போன் இல்லாத குடும்பங்களே இல்லை என்ற நிலை வந்துவிட்டது. தற்போது செல்போன் மற்றும் land line தொலைபேசி ஆகிய இரண்டையும் இந்தியாவில் 99 கோடி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவில் internet வசதியைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையில் உலகிலேயே இந்தியா இரண்டாவது இடத்தில் இருக்கிறது. எனவே, இந்திய மக்களைப் பொறுத்தமட்டில், எந்த புதிய தொழில்நுட்பம் வந்தாலும் முதலில் அது கைக்கெட்டாத தூரத்தில் இருப்பதுபோல் தோன்றும். அவற்றின் பயன்பாடுகளை உணரும்போது, இந்தச் சாதனங்கள் வாழ்க்கையின் ஓர் அங்கமாகிவிடுகின்றன.

இதுபோன்று, கண்காணிப்புக் கேமிராக்களையும் இந்தியாவில் எல்லா இடங்களிலும் பொருத்த வேண்டிய அவசியம் விரைவில் உருவாகும். சில ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் சில முக்கியமான போக்குவரத்து சிக்னல்களில் மட்டும் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்பட்டு, காவல் துறை கட்டுப்பாட்டு அறைகளில் இருந்தவாறு காவல் துறையினர் கண்காணித்துவரும் நிலை உருவானது. இதன்மூலம் விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு தப்பித்துச் சென்ற மோட்டார் வாகனங்களை எளிதில் அடையாளம் கண்டு, விரைந்து பிடிக்கவும், பல குற்றச் சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகளை எளிதில் கண்டுபிடித்து, சரியான புலனாய்வு மேற்கொள்ளவும் உதவியாக

அமைந்திருந்தது. இன்றைய காலகட்டத்தில், பல்வேறு இடங்களில், மக்கள் தங்கள் இல்லங்களில் பாதுகாப்பு நலன் கருதி, கண்காணிப்புக் கேமிராக்களை தாங்களே அமைத்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகி வருகிறது. எல்லோருடைய பாதுகாப்பிற்கும், சமூக விரோதிகளுக்குப் பயத்தை அளிப்பதற்கும், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும் அனைத்து தெருக்கள், முக்கியப் பொது இடங்கள், பள்ளிகள், ஆலயங்கள், அலுவலகங்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் இரயில்கள் ஆகியவற்றில் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்துவது மிகவும் அவசியமாகிறது.

எனவே, எப்படி மழை நீர் சேகரிப்பு வசதிகளை அனைத்து இல்லங்களிலும், அலுவலகங்களிலும் கண்டிப்பாக அமைக்க வேண்டும் என்பது நடைமுறையில் உள்ளதோ, அதேபோன்று எல்லா இடங்களிலும் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்த வேண்டிய நிலையை தமிழகத்தில் உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் திரு. ரா. சரத்குமார் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்துவது பற்றித்தான் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒவ்வொரு முக்கியப் பகுதிகளிலும் கேமிராக்களைப் பொருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*